# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# திருக்குறுந்தாண்டகம்

** நிதியினைப் பவளத் தூணை * நெறிமையால் நினைய வல்லார் *
கதியினைக் கஞ்சன் மாளக் * கண்டு முன் அண்டம் ஆளும் **
மதியினை மாலை வாழ்த்தி * வணங்கி என் மனத்து வந்த *
விதியினைக் கண்டு கொண்ட * தொண்டனேன் விடுகிலேனே 1

காற்றினைப் புனலைத் தீயைக் * கடி மதிள் இலங்கை செற்ற
ஏற்றினை * இமயம் மேய * எழில் மணித் திரளை ** இன்ப
ஆற்றினை அமுதம் தன்னை * அவுணன் ஆர் உயிரை உண்ட
கூற்றினை * குணம் கொண்டு உள்ளம்! * கூறு நீ கூறுமாறே 2

பாய் இரும் பரவை தன்னுள் * பருவரை திரித்து * வானோர்க்
காய் இருந்து அமுதம் கொண்ட * அப்பனை எம்பிரானை **
வேய் இருஞ்சோலை சூழ்ந்து * விரி கதிர் இரிய நின்ற *
மாயிருஞ்சோலை மேய * மைந்தனை வணங்கினேனே 3

கேட்க யான் உற்றதுண்டு * கேழலாய் உலகம் கொண்ட *
பூக் கெழு வண்ணனாரைப் * போதரக் கனவில் கண்டு **
வாக்கினால் கருமம் தன்னால் * மனத்தினால் சிரத்தை தன்னால் *
வேட்கை மீதூர வாங்கி * விழுங்கினேற்கு இனியவாறே 4

இரும்பு அனன்றுண்ட நீர் போல் * எம்பெருமானுக்கு * என்தன்
அரும் பெறல் அன்பு புக்கிட்டு * அடிமை பூண்டு உய்ந்து போனேன் **
வரும் புயல் வண்ணனாரை * மருவி என் மனத்து வைத்து *
கரும்பின் இன்சாறு போலப் * பருகினேற்கு இனியவாறே 5

மூவரில் முதல்வனாய * ஒருவனை உலகம் கொண்ட *
கோவினைக் குடந்தை மேய * குருமணித் திரளை ** இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப் * பைம்பொன்னை அமரர் சென்னிப்
பூவினை * புகழும் தொண்டர் * என் சொல்லிப் புகழ்வர் தாமே? 6

இம்மையை மறுமை தன்னை * எமக்கு வீடாகி நின்ற *
மெய்ம்மையை விரிந்த சோலை * வியன் திருவரங்கம் மேய **
செம்மையைக் கருமை தன்னைத் * திருமலை ஒருமையானை *
தன்மையை நினைவார் என்தன் * தலை மிசை மன்னுவாரே 7

வானிடைப் புயலை மாலை * வரை இடைப் பிரசம் ஈன்ற *
தேன் இடைக் கரும்பின் சாற்றைத் * திருவினை மருவி வாழார் **
மானிடப் பிறவி அந்தோ! * மதிக்கிலர் கொள்க * தந்தம்
ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு * உறுதியே வேண்டினாரே 8

உள்ளமோ ஒன்றில் நில்லாது * ஓசையின் எரி நின்றுண்ணும் *
கொள்ளி மேல் எறும்பு போலக் * குழையுமால் என்தன் உள்ளம் **
தெள்ளியீர்! தேவர்க்கெல்லாம் * தேவராய் உலகம் கொண்ட *
ஒள்ளியீர்! உம்மை அல்லால் * எழுமையும் துணை இலோமே 9

சித்தமும் செவ்வை நில்லாது * என் செய்கேன் தீ வினையேன்? *
பத்திமைக்கு அன்புடையேன் ஆவதே? * பணியாய் எந்தாய்! **
முத்தொளி மரகதமே! * முழங்கொளி முகில் வண்ணா! * என்
அத்த! நின் அடிமை அல்லால் * யாதும் ஒன்று அறிகிலேனே 10

தொண்டெல்லாம் பரவி நின்னைத் * தொழுது அடி பணியுமாறு
கண்டு * தான் கவலை தீர்ப்பான் ஆவதே? * பணியாய் எந்தாய்! **
அண்டமாய் எண்திசைக்கும் * ஆதியாய்! நீதி ஆன *
பண்டமாம் பரம சோதி! * நின்னையே பரவுவேனே 11

ஆவியை அரங்க மாலை * அழுக்குடம்பு எச்சில் வாயால் *
தூய்மையில் தொண்டனேன் நான் * சொல்லினேன் தொல்லை நாமம் **
பாவியேன் பிழைத்த ஆறென்று * அஞ்சினேற்கு அஞ்சல் என்று *
காவி போல் வண்ணர் வந்து * என் கண்ணுளே தோன்றினாரே 12

இரும்பு அனன்றுண்ட நீரும் * போதரும் கொள்க * என்தன்
அரும் பிணி பாவம் எல்லாம் * அகன்றன என்னை விட்டு **
சுரும்பமர் சோலை சூழ்ந்த * அரங்க மா கோயில் கொண்ட *
கரும்பினைக் கண்டு கொண்டு * என் கண்ணிணை களிக்குமாறே! 13

காவியை வென்ற கண்ணார் * கலவியே கருதி * நாளும்
பாவியேன் ஆக எண்ணி * அதனுள்ளே பழுத்தொழிந்தேன் **
தூவி சேர் அன்னம் மன்னும் * சூழ் புனல் குடந்தையானை *
பாவியேன் பாவியாது * பாவியேன் ஆயினேனே 14

முன் பொலா இராவணன் தன் * முது மதிள் இலங்கை வேவித்து *
அன்பினால் அனுமன் வந்து * ஆங்கு அடியிணை பணிய நின்றார்க்கு **
என்பெலாம் உருகி உக்கிட்டு * என்னுடை நெஞ்சம் என்னும் *
அன்பினால் ஞான நீர் கொண்டு * ஆட்டுவன் அடியனேனே 15

மாய மான் மாயச் செற்று * மருதிற நடந்து * வையம்
தாய மா பரவை பொங்கத் * தடவரை திரித்து * வானோர்க்கு
ஈயு மால் எம்பிரானார்க்கு * என்னுடைச் சொற்கள் என்னும் *
தூய மா மாலை கொண்டு * சூட்டுவன் தொண்டனேனே 16

பேசினார் பிறவி நீத்தார் * பேர் உளான் பெருமை பேசி *
ஏசினார் உய்ந்து போனார் * என்பது இவ்வுலகின் வண்ணம் **
பேசினேன் ஏச மாட்டேன் * பேதையேன் பிறவி நீத்தற்கு *
ஆசையோ பெரிது கொள்க * அலை கடல் வண்ணர் பாலே 17

இளைப்பினை இயக்கம் நீக்கி * இருந்து முன் இமையைக் கூட்டி *
அளப்பில் ஐம்புலன் அடக்கி * அன்பு அவர் கண்ணே வைத்து **
துளக்கமில் சிந்தை செய்து * தோன்றலும் சுடர் விட்டு * ஆங்கே
விளக்கினை விதியின் காண்பார் * மெய்ம்மையே காண்கிற்பாரே 18

** பிண்டியார் மண்டை ஏந்திப் * பிறர் மனை திரிதந்து உண்ணும் *
முண்டியான் சாபம் தீர்த்த * ஒருவன் ஊர் ** உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் * கச்சி பேர் மல்லை என்று
மண்டினார் * உய்யல் அல்லால் * மற்றையார்க்கு உய்யலாமே? 19

** வானவர் தங்கள் கோனும் * மலர் மிசை அயனும் * நாளும்
தேமலர் தூவி ஏத்தும் * சேவடிச் செங்கண் மாலை **
மான வேல் கலியன் சொன்ன * வண்தமிழ் மாலை நாலைந்தும் *
ஊனம் அதின்றி வல்லார் * ஒளி விசும்பு ஆள்வர் தாமே 20

**அடிவரவு:** நிதியினை காற்றினை பாயிரும் கேட்க இரும்பு மூவரில் இம்மையை வானிடை உள்ளம் சித்தம் தொண்டு ஆவியை இரும்பு காவியை முன்பொலா மாயம் பேசினார் இளைப்பினை பிண்டியார் வானவர் மின்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**